அரசாங்க ஊழியர்கள் வீடுகட்டும் கூட்டுறவுச் சங்கம்

*31 **கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சுமார் 1,000 பேர்கள் கொண்ட சென்னை அரசாங்க சிப்பந்திகள் கூட்டுறவு வீட்டு சங்கம், பதிவு எண் XNC 644, பெரவள்ளூர் ஏரியை (விஸ்தீரணம் 110 ஏக்கர்) மேற்படி சங்கத்திற்கு வீடு கட்டிக் கொள்வதற்காக நில ஆர்ஜிதம் செய்து கொடுக்க வேண்டி 1—2—1964-ம் தேதியிட்ட மனு ஒன்றை ரெவின்யூ செயலாளருக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், அதன் பிறகு அரசாங்கத்திற்கும் கொடுத்துள்ளதா ?

(இ) அப்படியானால் அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது?

(உ) இல்லையெனில், தாமதத்திற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. வெ. ராமையா : (அ) தமிழ்நாடு அரசாங்க ஊழியர்கள் வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் வீடுகள் கட்டுவதற்காகப் பெரவள்ளூர் ஏரியில் தன் பெயரில் நிலம் ஒப்படை செய்யுமாறு வேண்டி, அச் சங்கத்திடமிருந்து 1—2—1965 தேதியன்றுதான் மனு ஒன்று வந்தது ; இது 1—2—1964-ல் வரவில்லை. அரசாங்க வருவாய்த் துறைச் செயலாளருக்கும் தொடர்புள்ள அதிகாரிகளுக்கும் பொதுநல அமைச்சருக்கும் அனுப்பப்பட்ட மனுக்களும் வந்தன.

(இ) மேற்படி சங்க உறுப்பினர்களுக்கு வீட்டு மனை வசதிக்காக பெரவள்ளூர் ஏரியில் நிலம் ஒப்படை செய்ய வேண்டி அச் சங்கம் கொடுத்த வேண்டுகோளை நிராகரித்து, 4—6—1966-ம் தேதியன்று வருவாய்த் துறையில் வெளியான அரசாங்கக் குறிப்பு எண் 9076- 2 65-12-ல் ஆணைகள் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளன.

(உ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இத்தகைய கூட்டுறவுச் சங்கங்களுக்கு நில ஆர்ஜிதம் செய்வதற்குரிய செலவில் ஒரு பகுதி சர்க்காரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறதா ? அல்லது, பூராவும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : அது பற்றித் தனிக் கேள்வி வேண்டும்.

கொண்டக் கடலை விநியோகம்

*32 **கேள்வி.—திரு. செ. மாதவன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாநில அரசாங்கம் வெளி மாநிலங்களிலிருந்து கொண்டக் கடலை தருவிக்கின்றதா ?